---

# ரஜ்கம பிரதேச சபை
# காலி மாவட்டம்

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவம்பர் 23 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரஜ்கம பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

சபையினால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சரின் 2000 திசெம்பர் 15 ஆந் திகதிய 1162/12 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஏற்பாடுகளில் ஹிக்கடுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில்

ஹிக்கடுவ நகர சபை மற்றும் ரஜ்கம பிரதேச சபை என இரண்டு உள்ளூராட்சி மன்றங்களாக 2001 ஏப்ரல் 15 ஆந் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஹிக்கடுவ பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன உரிய வகையில் பகிர்ந்தளித்தல் 2012 நவம்பர் 23 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 5,969,579 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் மாகாண சபை நிதி ஏற்பாட்டின் கீழ் வேலைகளுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 3,182,494 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் செலவினம் அப்பெறுமானத்தில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் நிலையான வைப்பு வட்டி வருமானமாக ரூபா 101,644 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபைக்குரிய நிலையான வைப்புக்கள் காணப்படாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 101,644 தொகையான போலி வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 4,925,800 ஆக இருந்த போதிலும் ரூபா 7,700,000 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 2,774,200 தொகையினால் மீளாய்வாண்டின் வருமானம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் 03 வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற உத்தியோகத்தர்களின் கையிலுள்ள ரூபா 516,670 தொகையான மறைப்பெறுமான காசு மீதி இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### (அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 09 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 19,136,681 ஆக இருந்தது.

#### (ஆ) கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 68,136,058 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 3,129,554 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,465,077 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளவாறானது** | **திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை** |
|---|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| | | **(000)** | **(000)** | **(000)** |
| (i) | வீதவரியும் வரியும் | 526 | 869 | 846 |
| (ii) | வாடகை | 1,613 | 1,213 | 612 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 360 | 368 | 47 |
| (iv) | ஏனைய வருமானம் | 37,914 | 22,527 | 15,358 |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | **ரூபா** |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 631,749 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,494,580 |

### 2.2.3 ரஜ்கம பொதுச் சந்தைத் தொகுதி கடைகளை வாடகைக்கு விடல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2000 ஆம் ஆண்டின் போது 22 கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் உடன்படிக்கை நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 26 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் சகல உடன்படிக்கைகளும் மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2012 யூன் 25 ஆந் திகதி வரையிலும் உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 05, 06, 07, 08, 14, 16, 17, 18, 19, 20, 21, 22 ஆம் இலக்க கடைகளின் வாடகையாளர்களிடமிருந்து நிலுவையாக இருந்த வாடகை ரூபா 480,815 ஆகும். 2011 மே 04 ஆந் திகதி கடைகள் முத்திரையிடப்பட்டிருந்த போதிலும் அவைகளை திரும்ப வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) சந்தைக் கட்டிடத்தின் கடைகளின் கதவுகள் மற்றும் மின்சார முறைமைகள் உடைந்த நிலையில் காணப்பட்டமையினால் வாடகைக்கு விடுவதற்காக அவைகள் திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. சந்தைக் கட்டிடத்தின் முன்னாலுள்ள சுற்றாடலில் மீன் விற்பனை செய்யப்படுகின்றமையினால் கடைகளில் வியாபார நடவடிக்கைகளை செய்ய முடியாதிருந்த போதிலும் அந்த மீன் வியாபாரங்களை வேறொரு இடத்திற்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் கடைகளை வாடகைக்கு வழங்குதல் சாத்தியமற்றதாக இருந்தது.

(உ) ரூபா 5,000,000 பெறுமதியான பொதுச் சந்தைக் கட்டிடத்தை வாடகைக்கு வழங்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்காமையினால் சபையின் வளங்கள் உரிய பிரகாரம் பாதுகாக்கப்பட்டிராததுடன் சகல சொத்துக்களும் முகாமைத்துவம் இன்மையினால் பெறக்கூடியதாக இருந்த வாடகை வருமானத்தை சபை இழந்திருந்தது.

## 2.3 செயற்பாட்டு / முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

### 2.3.1 வங்கிக் கணக்கு

ஒரு வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்று இறுதியாக 2010 யூலை மாதத்திற்காகவும், இன்னொரு வங்கிக் கணக்கில் 2010 திசெம்பர் மாதம் வரையும் தயாரிக்கப்பட்டிருந்தன. 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 திசெம்பர் வரை விநியோகிக்கப்பட்டும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 308,165 பெறுமதியான 51 காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கூட்டுப்பசளைச் செயற்திட்டம் மற்றும் சுற்றாடல்

சபையின் மொன்ரொச்சியாவத்தை கூட்டுப்பசளை செயற்திட்டத்தின் உர உற்பத்தி செயற்பாடுகள் மற்றும் அருகிலுள்ள சுற்றாடலில் பயிர்ச்செய்கை தொடர்பான செயற்பாடுகள் கணக்காய்வுத் திகதியான 2012 யூன் 25 வரை நான்கு ஊழியர்கள் சேவையில் இருந்ததுடன் 2011 ஆம் ஆண்டு முழுவதும் ஒரு சந்தர்ப்பத்திற்கு 04 ஊழியர்கள் படி 11 ஊழியர்கள் சேவையாற்றியிருந்தனர். காவலாளிக்கு ரூபா 212,904 தொகையும் மற்றைய ஊழியர்களுக்கு ரூபா 553,055 தொகையும் ஆக அந்தக் காலப்பகுதியில் சம்பளத்திற்காக ரூபா 765,959 தொகை செலவிடப்பட்டிருந்தன.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுப்பசளை வேலைத்தளத்தில் காணப்பட்ட பக்கற்றுக்களாக்கப்பட்ட உரத்தின் அளவு 1110 கி.கிராமாக இருந்ததுடன் உற்பத்தி செய்து பக்கற்றுக்களாக்குவதற்காகக் காணப்பட்ட உர இருப்பு 7,000 கி.கிராம் அளவில் இருந்தது. உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பாக இருப்புப் பதிவேடு பராமரிக்கப்படாதிருந்ததுடன் கூட்டுப்பசளை உற்பத்தி அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பயிர்களுக்குப் போடப்படுகின்ற உரத்தின் அளவு தொடர்பாக அறிக்கை வைத்திருக்கப்படவில்லை.

(இ) கூட்டுப்பசளை செயற்திட்டத்தின் சுற்றாடலில் 3 வருடம் தொடக்கம் 1 ஏக்கர் அளவில் வாழைப் பயிர்ச் செய்கையில் அண்ணளவாக 250 வாழைக் கன்றுகள் காணப்பட்ட போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது எவ்வித வருமானமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 3200 கன்றுகள் உள்ள அன்னாசிப் பயிர்ச் செய்கையிலிருந்தும் எவ்வித வருமானமும் 2011 ஆம் ஆண்டின் போது கிடைத்திருக்கவில்லை.

(உ) கூட்டுப்பசளை செயற்திட்ட சுற்றாடலில் பயிர்களுக்கு கள்வர்களினால் இழப்பு ஏற்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது அதன் காவலாளிக்கு ரூபா 212,904 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

### 2.3.3 நீர்க்குழாய் பதிப்பதற்காக வீதியை வெட்டுதல்

---

சபை அதிகாரப் பிரதேசத்தில் நீர்க்குழாய் பதிப்பதற்காக வீதியை வெட்டுவதற்காக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிலிருந்து 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 1,556,133 கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பெறப்பட்ட கட்டணங்களிலிருந்து வெட்டப்பட்ட வீதியிலுள்ள இடங்கள் மீளமைக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2012 யூன் 25 ஆந் திகதி வரையிலும் அந்த இடங்கள் மீள் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதியில் வெட்டப்பட்ட இடங்கள் மீளமைக்கப்படாமல் நீண்ட காலம் சென்றதனால் வீதி சேதத்திற்குள்ளாகியிருந்தது.

### 2.3.4 கூட்டிணைந்த திட்டம் செயல்நடவடிக்கைத் திட்டம்

---

கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. கொள்வனவுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிடிருக்கவில்லை.

## 2.4 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) ஒப்பந்த நிருவாகம்
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்